[திரு. சு. முத்துசாமி] [1982 ஏப்ரல் 7

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 80 காசிலிருந்து 90 காசுகளாக உயர்த்தப்பட்டது. ஆனால் குறைந்தபட்சக் கட்டணத்தில் மாறுதல் ஏதும் ஏற்படுத்தப் படவில்லை. தற்பொழுது ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 1.70 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற செய்தி

பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்தலும்) திருத்தம் சட்ட முன்வடிவு, 1982.

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன்வடிவுகள் திருத்தம் ஏதுவுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1981).

(2) தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981).

(3) மேலும், தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62 1981) மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்ட தாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

7 கவன ஈர்ப்புகள்.

(அ) மதுரை 'ஆல்பர்ட் விக்டர் பாலம்'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி என். எஸ். வி. சித்தன், டி. மணி, ப. நெடுமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருவார்